# சிங்கப்பூரர்களுக்கு வேலைகள்




## பொருளியல் ஆய்வுக் குழு

பொருளியல் ஆய்வுக் குழுவின் இணையத்தளம்:
www.erc.gov.sg
மின்அஞ்சல்: mti_erc@mti.gov.sg

## வேலைகளுக்கும் வளர்ச்சிக்கும் வரி மாற்றங்கள்

உலகம் மாறிவிட்டது. போட்டியோ மிகவும் கடுமை.

சிங்கப்பூரர்களுக்கு வேலைகளை உருவாக்க இப்போது நாம் மாற்றங்கள் செய்ய வேண்டும்.




தொழில்கள் வளர உதவ, வருமான வரிகளைக் குறைத்து கூடுதல் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

நிறுவன மற்றும் தனிப்பட்டவரின் வருமான வரி விகிதங்களை 20 விழுக்காட்டுக்குக் குறைக்கப் பொருளியல் ஆய்வுக் குழு பரிந்துரைக்கிறது.




## சிங்கப்பூரர்களைக் கவனித்துக்கொள்ளுதல்

நமது குடிமக்களின் சுகாதார, கல்வி, பிற தேவைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். இதற்குப் பணம் செலவிட வேண்டும்.

வருமான வரிகளைக் குறைப்பதால் அரசாங்க வருவாய் குறையும். இந்த இழப்பில் ஒரு பகுதியை ஈடுகட்ட, விலை பொருள் சேவை வரியை உயர்த்த வேண்டும்.

பொருளியல் ஆய்வுக் குழு, வி பொ சே வரியை 3 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காட்டுக்கு உயர்த்தப் பரிந்துரைக்கிறது.

நம் 5% வரிகூட, உலகில் ஆகக் குறைந்த வி பொ சே வரி விகிதங்களில் ஒன்றாக இருக்கும்.




எப்படி என்பதை அடுத்த பக்கத்தில் பார்க்கவும்! →

## சிங்கப்பூரர்களுக்கு உதவி




**இந்தத் திட்டம், நம் குடும்பங்கள் பாதிப்பு அடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.**

